
RNI No : TNTAM/2023/86867
www.deltamalar.com
95667 16060

# டெல்டா மலர்
DELTA MALAR

| ● மலர் - 4 | ● இதழ் - 92 | 1 - 7 ஜனவரி 2026 | ● பக்கம் - 8 | ● விலை ரூ.5 | தஞ்சாவூர் |
|---|---|---|---|---|---|
| ● VOL - 4 | ● ISSUE - 92 | 1 - 7 January 2026 | ● PAGE - 8 | ● PRICE ரூ.5 | THANJAVUR |


# 100 நாள் ஊரக வேலை உறுதி திட்டத்தை 125 நாட்களாக உயர்த்திய மத்திய அரசு






**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை (MGNREGA) “வளர்ச்சியடைந்த பாரத வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஊரக உறுதியளிப்புச் சட்டம்” (Viksit Bharat Guarantee for Rozgar and Ajeevika Mission – Gramin / VB–G RAM G) என பெயர் மாற்றப்பட்டுள்ளது.**

கடந்த 2005-ம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை (எம்ஜிஎன் ஆர் இஜிஏ) அமலுக்கு கொண்டு வந்தது. கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் வகையில் இந்த திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி, ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் பெயரை, ‘விக்ஷித் பாரத் கேரன்ட்டி பார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் (கிராமின்) (விபி-ஜி ராம் -ஜி)’ என பெயர் மாற்றி, பல்வேறு மாற்றங்களை செய்ய வகை செய்யும் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் வழங்கியது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், புதிய ஊரக வேலை உறுதி திட்ட மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், இந்த மசோதாவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதற்காக முன்மொழிந்தார்.

அப்போது மக்களவையில் பேசிய சிவராஜ் சவுகான், “காந்தி எங்கள் இலட்சியம், எங்கள் உத்வேகம். மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதனால்தான் பாரதிய ஜனதா கட்சி காந்திஜியின் சமூக மற்றும் பொருளாதாரத் தத்துவத்தை தனது பஞ்சநிச்சயத்தில் இணைத்துள்ளது.

எதிர்க் கட்சிகள் காந்தியின் கொள்கைகளைக் கொலை செய்கின்றன. நேற்று சபையில், இரவு 1:30 மணி வரை மரியாதைக்குரிய உறுப்பினர்களின் பேச்சைக் கேட்டேன். நீங்கள் உங்கள் கருத்துகளையே பேசுகிறீர்கள், எங்கள் வார்த்தைகளைக் கேட்பதில்லை; இதுவும் ஒரு வன்முறைதான்” என்று கூறினார்.

மேலும், “விக்சித் பாரத் 2047 என்ற தேசிய தொலைநோக்கு லட்சியத்துக்கு இணங்க, ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத்துக்கும் ஒரு நிதியாண்டிற்கு 125 நாட்கள் ஊதிய வேலைவாய்ப்புக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது. இது கிராமப்புற வாழ்வாதாரங்களை வலுப்படுத்துவதிலும், ஒட்டுமொத்த கிராமப்புற வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது” என்றார்.

எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டதற்கு மத்தியில், இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா மீது மக்களவையில் கிட்டத்தட்ட 14 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. ஆளும் பாரதிய ஜனதா கட்சி இந்த மசோதாவை 2047-க்குள் விக்சித் பாரத்தை அடைவதற்கான ஒரு தீர்க்கமான நடவடிக்கை என்று கூறி ஆதரித்தபோதிலும், இந்தச் சட்டத்தை நாடாளுமன்ற நிலைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இந்த மசோதாவின் கீழ், 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட கிராமப்புறத்தில் வசிக்கும் எந்தவொரு இந்திய குடிமகனும் இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரருக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் உத்தரவாதமான வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டம், ஒரு நிதியாண்டில் ஒருவருக்கு 100 நாள் வேலை வழங்க உறுதி அளிக்கும் நிலையில், புதிய மசோதா 125 நாள் வேலை வழங்க உறுதி அளிக்கிறது. இப்போதைய திட்டத்துக்கான முழு நிதியையும் மத்திய அரசு வழங்கி வருகிறது. ஆனால், புதிய மசோதாவின் படி, மத்திய அரசும் மாநில அரசுகளும் (யூனியன் பிரதேசங்கள் உட்பட) 60:40 என்ற விகிதத்தில் நிதி சுமையை ஏற்க வேண்டும். அதேநேரம், வடகிழக்கு மாநிலங்கள், இமயமலையை ஒட்டிய மாநிலங்கள் (உத்தராகண்ட், இமாச்சல், ஜம்மு-காஷ்மீர்) 10 சதவீத நிதி வழங்கினால் போதும்.



ஊரக வேலை திட்டத்தால் விவசாய பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைப்பதில்லை என புகார் உள்ளது. இதற்கு தீர்வு காணும் வகையில், விவசாயப் பணி உச்சத்தில் இருக்கும் காலங்களில் இந்த திட்டத்தின் கீழ் வேலை வழங்குவதை மாநில அரசுகள் நிறுத்தி வைக்க புதிய மசோதா வகை செய்கிறது. புதிய ஊரக வேலை திட்டப் பணிகள், விக்ஷித் பாரத் தேசிய ஊரக கட்டமைப்பு திட்டத்துடன் இணைக்கப்படும். குறிப்பாக, தண்ணீர் பாதுகாப்பு தொடர்பான பணிகள், ஊரக உள்கட்டமைப்பு, வாழ்வாதாரம் தொடர்பான கட்டமைப்பு பணிகள், மோசமான காலநிலையை மட்டுப்படுத்தும் பணிகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

### தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின்

# மாநில இளைஞர் அணி செயலாளர் நியமனம்

● தஞ்சாவூர்

தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் மாநில துணைச்செயலாளர் மற்றும் அலுவலக செய்தி தொடர்பாளர் ஐங்கரன் பாலமுரளி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில தலைவர் புலவர் ஆதி நெடுஞ்செழியன், மாநில துணைத் தலைவர் கோவிந்தராஜ், மாநில பொதுச்செயலாளர் A.T.ராஜா சுப்ரமணியன் ஆகியோர் ஆலோசனையின்படி, மாநில அவைத் தலைவர் கவிஞர் செம்பியரான், மாநில இணைச்செயலாளர் ஆதிகுமார் ஆகியோரின் பரிந்துரைப்படியும், மாநில இளைஞர் அணி செயலாளராக S.M.T முகேஷ் BE நியமனம்



செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் அனைத்து நிர்வாகிகளும் முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பொங்கலுக்கு 34 சிறப்பு ரயில்கள்

# முன்பதிவு தொடக்கம்

தெற்கு ரயில்வே சார்பில் சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சென்னை உள்ளிட்ட முக்கிய இடங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் வரும் 11-ஆம் தேதி முதல் இயக்கப்படவுள்ளன.

சென்னை சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ஆகிய நிலையங்களில் இருந்தும், நாகர்கோவில், திருநெல்வேலி, கோவை, மதுரை, ராமேசுவரம், ஈரோடு, செங்கோட்டை உள்ளிட்ட நிலையங்களில் இருந்தும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளன. அதன்படி 20 வழித்தடங்களில் 34 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

பயணிகள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ரயில்வே துறை முன்பதிவு இணையதளம் மற்றும் நேரடியாக ரயில் நிலைய கவுண்ட்டர்களில் முன்பதிவு செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசு திட்டங்கள் குறித்த

# ஒருங்கிணைந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் திருச்சிராப்பள்ளி மத்திய மக்கள் தொடர்பு அலுவலகம் ஒருங்கிணைந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்சிராப்பள்ளி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் அந்தநல்லூர் கிராமத்தில் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி மத்திய மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கள விளம்பர உதவியாளர் அருண்குமார் அனைவரையும் வரவேற்றார். தஞ்சாவூர் மத்திய மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கள விளம்பர உதவியாளர் ரவிந்திரன் நிகழ்ச்சி குறித்து விளக்க உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய மத்திய மக்கள் தொடர்பகத்தின் சென்னை மண்டல உதவி இயக்குனர் பாலநாகேந்திரன், நாடு முழுவதும் இது போன்ற ஒருங்கிணைந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மத்திய மக்கள் தொடர்பகம் நடத்திக் கொண்டிருக்கிறது. இதில் பொதுமக்கள் கலந்து கொண்டு அரசு திட்டங்களை பற்றிய விழிப்புணர்வை குறிப்பாக கிராமப்புற மக்கள் பெற வேண்டும் என்றும் அரசின் திட்டங்களை பயன்படுத்தி பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மாவட்ட திட்ட அலுவலர் நித்யா அங்கன்வாடி மையத்தின் மூலம் குழந்தைகளுக்கு வளர் இளம் பெண்களுக்கு மற்றும் பாலூட்டும்



தாய்மார்களுக்கு ஆற்றக்கூடிய பல்வேறு பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

குழுமணி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் ராஜராஜன் புற்றுநோய் சர்க்கரை நோய் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் அதற்கான மருத்துவ முறைகள் மற்றும் தொற்று நோய்கள் பற்றி எடுத்துரைத்தார்.

அந்தநல்லூர் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் கிரிஜா குழந்தையின் வாழ்நாள் முழுமைக்குமான ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சிக்கு முதல் ஆயிரம் நாட்களில் வழங்கப்படும் ஊட்டச்சத்தே அடித்தளமாகும், எனவே முறையான கர்ப்பகால பராமரிப்புடன் குழந்தையின் முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். ஆறு மாதத்திற்குப் பின் இரண்டு வயது வரை தாய்ப்பாலுடன் கூடுதலாக இணை உணவு வழங்க வேண்டும் என்று கூறினார்.

அந்தநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சண்முகம் ஜல் ஜீவன் அபியான் திட்டம், திடக் கழிவு மேலாண்மை மற்றும் நெகிழி பயன்பாட்டை தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துரைத்தார்.

சமூக நல துறையின் விரிவாக்க அலுவலர் சாவித்திரி சமூகநலத் துறையில் செயல்படுத்தப்படும் திருமண உதவி மற்றும் பல்வேறு திட்டங்களைபற்றி எடுத்துரைத்தார்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் தூய்மை இந்தியா ஒருங்கிணைப்பாளர் சங்கீதா மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை பொதுமக்கள் பிரித்து கொடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், கழிவறை கட்ட அரசு வழங்கும் ஊக்கத்தொகை பற்றியும் விளக்கினார்.

மேலும் ஆரோக்கிய குழந்தை போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை முன்னிட்டு அரசு திட்டங்கள் குறித்த விளக்க பிரசுரங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பாக ஊட்டச் சத்து குறித்த கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசின் பதிவு பெற்ற கலை குழுவினரால் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிறைவாக அந்தநல்லூர் ஊராட்சி செயலர் செந்தில்குமார் நன்றியுரை ஆற்றினார்.

# இளந்தமிழர் இலக்கிய பயிற்சி பட்டறை முகாம்

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்படும் இளந்தமிழர் இலக்கிய பயிற்சி பட்டறை முகாம் 3 ஜனவரி 2026 முதல் 9 ஜனவரி 2026 வரை அன்னை கல்வி குழும வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்த பயிற்சி முகாமின் தொடக்க நிகழ்ச்சி 3 ஜனவரி 2026 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மாநில இயக்குநர் மதிப்பிற்குரிய முனைவர் ஔவை நா. அருள் அவர்கள் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார்.




அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் மாணிக்கவாசகி, மாநில இயக்குநர் முனைவர் ஔவை நா.அருள் மற்றும் மாநில துணை இயக்குநர் சத்திய பிரியா ஆகியோரை சால்வை அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர் இளஞ்செழியன் சிறப்பாக செய்திருந்தார்.

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறை பேராசிரியர்கள் முனைவர் செந்தில், முனைவர் செந்தில்குமார், முனைவர் ஷர்மிளா, முனைவர் லயோலா உள்ளிட்ட தமிழ் துறை அனைத்து பேராசிரியர்கள் மற்றும் தேசிய மாணவர் படை அதிகாரி லெப்டினன்ட் (NCC) ரமேஷ்பாபு ஆகியோர் நிகழ்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர்.

இந்த பயிற்சி முகாமில் இளந்தமிழர்களுக்கான இலக்கிய திறன் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பல்வேறு பயிற்சி அமர்வுகள் நடத்தப்படவுள்ளன.




# ஆன்மிகம்

# தஞ்சை ராஜராஜ சோழனின் மனைவி புதைக்கப்பட்ட இடம் இதுதானா!

## பஞ்சவன் மாதேவி பள்ளிப்படை கோவில்



கோவில்கள் என்றால் இறைவனுக்காக கட்டப்பட்ட இடம் என மட்டுமே பலரும் நினைப்பது வழக்கம். ஆனால், பள்ளிப்படை கோவில் என்பது, அதிலிருந்து சற்றே மாறுபட்டதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒன்று.

கோவில்கள் என்றால் இறைவனுக்காக கட்டப்பட்ட இடம் என மட்டுமே பலரும் நினைப்பது வழக்கம். ஆனால், பள்ளிப்படை கோவில் என்பது, அதிலிருந்து சற்றே மாறுபட்டதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒன்று.

பள்ளிப்படை கோவில்:அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் இறந்தால், குறிப்பாக அரசன் அல்லது அரசிக்கு அமைக்கப்பட்ட சமாதி கோவில்தான் பள்ளிப்படை கோவில் என்று அழைக்கப்படுகிறது. அதன்படி இறந்தவர் சிவதீட்சை பெற்றவராக இருக்க வேண்டும். பொதுவாக சிவதீட்சை பெற்றவர்களின் உடலை தீக்கு இரையாக்கக்கூடாது என்பது சைவ மரபு.அப்படி சிவதீட்சை பெற்றவரின் உடலை எரித்தால் அது சிவபெருமானின் உடலையே தீக்கு தீயிட்டு எரிப்பதற்கு சமம் என்பது பிரபல நம்பிக்கை. மாறாக அத்தகைய உடலை தீயிட்டு எரித்தால், அது அந்த நாட்டில் பேரழிவை ஏற்படுத்தும் என்றும், நோய்,பஞ்சம், வறுமை போன்றவற்றால் மக்கள் துன்புறுவார்கள் என்றும் நம்பப்படுகிறது.

எனவே, சிவதீட்சை பெற்றவர்களின உடலை சுத்தம் செய்து, பள்ளம் (குழிவெட்டி) அமைத்து, பின்னர் அந்த உடலை கிழக்குப் பக்கம் பார்க்கும் வகையில் அமர வைத்து, அந்த உடலுக்கு இறைவடிவங்களுக்குச் செய்வது போன்ற அனைத்து வகை அபிஷேகங்களையும் செய்து, படையலிட்டு, அவற்றை அந்த உடலுக்குக் கொடுப்பதாக பாவித்து, பின்னர் அந்த உடலை அமர்ந்த நிலையில் அப்படியே மண் மூடிப் புதைத்து, தலைக்கு மேல் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வார்கள். எனவே, சிவதீட்சை பெற்றவர்களின உடலை சுத்தம் செய்து, பள்ளம் (குழிவெட்டி) அமைத்து, பின்னர் அந்த உடலை கிழக்குப் பக்கம் பார்க்கும் வகையில் அமர வைத்து, அந்த உடலுக்கு இறைவடிவங்களுக்குச் செய்வது போன்ற அனைத்து வகை அபிஷேகங்களையும்







செய்து, படையலிட்டு, அவற்றை அந்த உடலுக்குக் கொடுப்பதாக பாவித்து, பின்னர் அந்த உடலை அமர்ந்த நிலையில் அப்படியே மண் மூடிப் புதைத்து, தலைக்கு மேல் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வார்கள்.

பஞ்சவன் மாதேவி பள்ளிப்படை கோவில்:அவ்வாறு அமைக்கப்பட்டதுதான் ராஜராஜ சோழனின் மனைவிகளுள் ஒருவருக்கு எழுப்பப்பட்ட பஞ்சவன் மாதேவி கோவில். இந்த கோவில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பகுதியில், பட்டீஸ்வரத்திற்கும் திருவிடைமருதூருக்கும் இடையே உள்ள பழையாறை கிராமத்தில் அமைந்துள்ளது. இது பஞ்சவன்மாதேவீச்சரம் என்று அழைக்கப்படுகிறது. இந்த கோவிலை உள்ளூர் மக்கள் ரமசாமி கோயில் என அழைக்கின்றனர்.பழுவேட்டரையர் குலப்பெண்ணான பஞ்சவன் மாதேவி, ராஜராஜ சோழனின் மனைவிகளுள் ஒருவர். கடாரம் வென்ற ராஜேந்திர சோழனின் சிற்றன்னைதான் (சித்தி) இந்த பஞ்சவன் மாதேவி. இவரது உடலை வைத்து, அதன்மேல் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து கட்டப்பட்ட பள்ளிப்படை கோவில்தான் இது. தன் மீது மிகுந்த பாசம் வைத்திருந்த தன் சிற்றன்னை நினைவாக ராஜேந்திர சோழன் இந்த கோவிலை கட்டினான் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

இந்த கோவிலின் சுற்றுப்புற சுவர்களில் ஏராளமான கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் ஒரிடத்தில் இது பள்ளிப்படை கோவில் என்பதும், பஞ்சவன் மாதேவிக்காக எழுப்பட்டது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பள்ளிப்படை என்பதை மட்டும் யாரோ அழிக்க முற்பட்டுள்ளனர். ஆனால், நல்வாய்ப்பாக அதனை முழுமையாக அழிக்காததால் அது நன்கு காட்சியளிக்கிறது. இந்த கோவிலில் உள்ள நந்தி பளபளப்பாகவும், மணிகள் கட்டப்பட்டு கலைநயத்துடனும் காணப்படுகிறது. பஞ்சவன் மாதேவி பழுவேட்டரையர் வம்சாவளியை சேர்ந்தவர் என்பதால் அந்த வகை (பழுவேட்டரையர் பாணி) கலை நுணுக்கத்துடன் கூடிய சிற்ப வகை அமைப்பு இந்த பள்ளிப்படை கோவிலில் காணப்படுகிறது. தமிழர் வரலாற்றில் எத்தனையோ வகை வழிபாட்டு முறைகள் உள்ளன. அதில் இந்தப் பள்ளிப்படை கோயில் அமைப்பும் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது.பழையாறையின் அழகை பற்றியும் அதன் சிறப்பை பற்றியும் பொன்னியின் செல்வன் நாவலில் கல்கி அழகுற நயம்பட எடுத்துரைப்பார். தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் பகுதியில் உள்ள வரலாற்றை தாங்கி நிற்கும் முக்கிய கோவில்களுள் ஒன்று இந்த பஞ்சவன் மாதேவி கோவில். இது, வரலாற்று ஆர்வலர்களும், சுற்றுலா பயயிணிகளும் தவறாமல் பார்க்க வேண்டிய இடம்.


க்ரைம்
உண்மை என்ன?

# 2025-ல் தமிழ்நாட்டில் அதிர்வலையை ஏற்படுத்திய சம்பவங்கள்...



## கரூர் கூட்டநெரிசல் சம்பவம்

செப்டம்பர் 27ஆம் தேதி அன்று கரூரில் விஜய்யின் தவெக மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தியது. அப்போது அளவுக்கு அதிகமாக கூட்டம் சேர்ந்ததில் திடீர் கூட்டநெரிசல் ஏற்பட்டது. 41 பேர் உயிரிழந்தனர். இது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இவ்வழக்கு தற்போது சிபிஐ விசாரணையில் உள்ளது.



## ரிதயன்யா தற்கொலை

ஜூன் 28ஆம் தேதி திருப்பூர் அருகே திருமணமான 77 நாள்களிலேயே வரதட்சணை கொடுமையால் ரிதன்யா என்ற இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதில் கைதான கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வரமூர்த்தி, மாமியார் சித்ராதேவி ஆகியோர் கைது செய்யப்பட்டு, பின்னர் நிபந்தனை ஜாமீன் பெற்றனர். வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.



## கடலூர் ரயில் விபத்து

கடலூர் மாவட்டம் செம்மங்குப்பத்தில் கடந்த ஜூலை 8ஆம் தேதி அன்று ரயில்வே கேட்டை கடக்க முயன்ற தனியார் பள்ளி வேன் மீது, விழுப்புரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி வந்த பயணிகள் ரயில் மோதிய விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். மொத்தம் 5 பேர் பயணித்த நிலையில் 6ஆம் வகுப்பு மாணவன் நிமலேஷ், 11ஆம் வகுப்பு மாணவி சாருமதி மற்றும் செழியன் என மூன்று பேர் உயிரிழந்தனர். அந்த ரயில்வே கேட் பகுதியில் பணியில் இருந்த கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பணியிட நீக்கம் செய்யப்பட்டார். போலீசார் அவரை கைது செய்து விசாரித்ததில் அவரின் அலட்சியத்தால்தான் இந்த விபத்து நடந்தது என்பது உறுதியானது.



## அஜித்குமார் லாக்கப் மரணம்

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் கோயிலுக்கு வந்த பக்தர் நிகிதா என்பவரின் காரில் இருந்த நகை காணாமல் போன வழக்கில் அக்கோயிலின் காவலாளி அஜித்குமார் போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். விசாரணையில் அஜித்குமாரை போலீசார் தாக்கியதில் அவர் ஜூன் 28ஆம் தேதி அன்று உயிரிழந்தார். இந்த லாக்கப் மரணம் அரசியல் ரீதியாக பெரும் அதிர்வலைகளை எழுப்பியது. தற்போது சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது.



## கவின் ஆணவப் படுகொலை

ஜூலை 27ஆம் தேதி காதல் விவகாரத்தில் தூத்துக்குடி மாவட்டத்தைச் கவின் செல்வகணேஷ் ஆணவக்கொலை செய்யப்பட்டார். கவின் காதலித்த பெண்ணின் தம்பி சுர்ஜித்தால் நெல்லை மாவட்டம் கேடிசி நகரில் இந்த கொலை சம்பவத்தை நிகழ்த்தினார். சுர்ஜித் கைதான நிலையில், அவர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது. வழக்கில் சுர்ஜித் தந்தையும், உதவி சார்பு காவல் ஆய்வாளரான சரவணன் மற்றும் சுர்ஜித்தின் பெரியம்மா மகன் ஜெயபாலன் என்பவரையும் போலீசார் கைது செய்தனர்.



## திருத்தணி மாணவன் சம்பவம்

இது ஆண்டின் இறுதியில், அதாவது சமீபத்தில் நடந்த சம்பவம். தமிழ்நாட்டில் போதை கலாச்சாரம் மலிந்திருப்பதை இந்த நிகழ்வு மீண்டும் எச்சரிக்கை மணியை அடித்திருக்கிறது. டிசம்பர் 27ஆம் தேதி அன்று திருத்தணியில் ஒடிசாவைச் சேர்ந்த இளைஞரை, சிறார்கள் இணைந்து கொடூரமாக தாக்கினர். தாக்கப்பட்ட இளைஞர் உடல்நலன் சீராகி ஒடிசாவுக்கு திரும்பிவிட்டார். கைதான நால்வரில் மூவர் சிறார் கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டனர். மற்றொருவர் சிறார் நீதிக்குழு அறிவுறுத்தலின்படி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## 10 வயது பள்ளி மாணவிக்கு நேர்ந்த கொடூரம்

ஜூலை 12ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே உள்ள ஆரம்பாக்கம் பகுதியில் பள்ளி முடித்து வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த 10 வயது சிறுமியை, வடமாநில இளைஞர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து, 14 நாள்கள் தேடுதலுக்கு பிறகு குற்றவாளி ராஜூ பிஸ்வ கர்மா கைது செய்யப்பட்டார். இவர் ஒடிசாவை சேர்ந்தவர் என தெரியவந்தது. இந்த வழக்கில் கடந்த டிசம்பர் 24ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றவாளி ராஜூ பிஸ்வ கர்மாவுக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், ரூ.2 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

# அரசியல் மேடை



# திமுகவுடன் கூட்டணி இல்லையா!...

### காங்கிரஸ் – தவெக கூட்டணி வதந்தி; கிரிஸ் சோடங்கர் பரபரப்பு பேட்டி

**சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் கட்சி தொடருமா என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. இதற்குக் காரணமாக, காங்கிரஸ் கட்சியின் சில நிர்வாகிகள் தவெகுடன் தொடர்பில் இருந்து பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறப்படுகிறது. குறிப்பாக ராகுல் காந்திக்கு நெருக்கமானவராக கருதப்படும் பிரவீன் சக்ரவர்த்தி, தவெக தலைவர் விஜயை சந்தித்ததுடன், திமுகவை விமர்சித்து கருத்துகளை வெளியிட்டது கவனம் பெற்றது.**

இந்த அணுகுமுறையை திமுக தலைமை விரும்ப வில்லை என்பதும் வெளிப்படையாக பேசப்பட்டது. அதே நேரத்தில், காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் உள்ளிட்டோர், இந்தத் தேர்தலில் திமுக அதிக தொகுதிகளை காங்கிரசுக்கு ஒதுக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இதனால் திமுககாங்கிரஸ் கூட்டணி தொடருமா என்ற கேள்வி தீவிரமானது.

இந்த சூழலில், திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த காங்கிரஸ் தலைமை ஐந்து பேர் கொண்ட குழுவை அமைத்தது. மறுபுறம், தவெக தரப்பில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க விருப்பம் தெரிவிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியானது. மேலும், திருச்சி வேலுச்சாமி உள்ளிட்ட சில காங்கிரஸ் நிர்வாகிகள் தவெகவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என வெளிப்படையாக கருத்து தெரிவித்தனர்.

இவ்வாறான பின்னணியில், சென்னை வந்த காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தி, கூட்டணி நிலவரம் மற்றும் தேர்தல் பணி குறித்து விவாதித்தார்.

இதனைத் தொடர்ந்து, கிரிஷ் ஜோடங்கர் மற்றும் தமிழககாங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய அவர், திமுக காங்கிரஸ் கட்சிகளுக்கிடையிலான தொகுதி பங்கிடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்கூட்டியே தொடங்கப்பட்டு, தற்போது சீரான முறையில் முன்னேறி வருகின்றன.

இதற்காக சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்து தேர்தல் நிலவரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. வரவிருக்கும் தேர்தலை கருத்தில் கொண்டு இரு கட்சிகளிலும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேட்பாளர் தேர்வுக்காக 5000-க்கும் மேற்பட்ட விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

தொடர்ந்து, திமுக கூட்டணி இல்லை என்று செய்திகள் வெளியானது குறித்த கேள்விக்கு, திமுகவுடன் கூட்டணி இல்லை என நாங்கள் எப்போது சொன்னோம்? நாங்கள் இன்றும் திமுக கூட்டணியில்தான் இருக்கிறோம் என்று கூறினார். இதனையடுத்து, ஜோதிமணி கூறிய புகார் தொடர்பாக, கரூர் மாவட்ட காங். நிர்வாகிகள் சதீஷ்குமார், செந்தில்குமார் ஆகியோருக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. உட்கட்சி பிரச்சனைகளை நிர்வாகிகள் பொதுத்தளத்தில் பகிர வேண்டாம். மேலும் ஜோதிமணி புகாரை விசாரிக்க குழு அமைக்கப்பட்டு உள்ளதாக கிரிஸ் சோடங்கர் கூறினார்.

மேலும் தமிழக அரசியல் களத்தில் , காங்கிரஸ் - தவெகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அக்கட்சியை சேர்ந்த ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளது குறித்த கேள்விக்கு, தவெகவுடன் பேச்சுவார்த்தை என்பது வதந்தி. கூட்டணி தொடர்பாக திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஸ் சோடங்கர் திட்டவட்டமாக தெரிவித்தார்.



## தவெகவில்... அதிமுக மாஜி அமைச்சர்கள்

### செங்கோட்டையன் தகவல்

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பொங்கலுக்குள் தவெகவில் இணைவார்கள் என தவெக தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

மேலும், அதிமுக நிர்வாகிகள் தவெகவில் இணையும் நிகழ்வு பொங்கலுக்குள் நடைபெறும். விஜய்யை முதல்வராக ஏற்றுக் கொள்ளும் அனைவரையும் கூட்டணியில் சேர்ப்போம் என்றும், ஓபிஎஸ், டிடிவி தவெகவிற்கு வர வாய்ப்புள்ளது என்றும், அரசியல் நிலவரத்திற்கு காலமே பதில் சொல்லும் எனவும் கூறினார்.

# ரூ.5 ஆயிரம் ரொக்கத்துடன் பொங்கல் பரிசு வழங்க வேண்டும்

### நயினார் நாகேந்திரன்



ரூ.5 ஆயிரம் ரொக்கத்துடன் பொங்கல் பரிசு வழங்க வேண்டும் என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், இன்னும் 10 நாட்களில் பொங்கல் திருநாள் வரவிருக்கும் வேளையில், இப்போது தான் பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு 248 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது திமுக அரசு.

பொங்கலுக்கு ரொக்கப் பணம் வழங்க வேண்டும் என பொதுமக்களும், தொகுப்பில் மஞ்சள் கிழங்கு, வெல்லம் வழங்கிட கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகளும் எதிர்பார்த்து வரும் வேளையில், சொற்பத் தொகையை ஒதுக்கி, அவர்களின் நம்பிக்கையை உடைத்து, வழக்கம் போல ஏமாற்றத்தை பரிசளித்துள்ளது திமுக அரசு.

மேலும், வருடாவருடம் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் நிலையில், இத்தனை நாட்கள் பரிசுத் தொகுப்புக்கான கரும்பையும் பச்சரிசியையும் சக்கரையையும் கொள்முதல் செய்யாதது ஏன்? ஒருவேளை, கடைசி நேரத்தில் கண்துடைப்புக்காக ஏனோதானோ எனக் கொள்முதல் செய்து, உழவர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் திட்டமா?

ஆட்சி முடியும் தருவாயிலாவது திமுக அரசின் போங்காட்டத்தை ஒதுக்கி வைத்து, உடனடியாகக் கரும்பையும் மஞ்சளையும் வெல்லத்தையும் கொள்முதல் செய்து, ரூ.5,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசை சரிவர வழங்குங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே! இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் எப்போது செயல்பாட்டுக்கு வரும்?

### நயினார் கேள்வி

தமிழக அரசு அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் எப்போது செயல்பாட்டுக்கு வரும் என்பது கேள்விக்குறியாகியுள்ளதாக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழகம் தலைநிமிர தமிழனின் பயண பிரசார பொதுக் கூட்டத்தில் நயினார் நாகேந்திரன் பேசியதாவது: தமிழகத்தில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதுதான் திமுக ஆட்சியின் சாதனை. பாலியல் குற்றங்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் வாக்குறுதி என்னவாயிற்று? கடந்த தேர்தலின் போது திமுக அறிவித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.




பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவேன் என்று 5 ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தற்போது ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பினர் நடத்திய போராட்டத்துக்குப் பின்னரே, தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை நிறுவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதற்கான அரசாணை எப்போது வெளியிடப்படும் எனத் தெரியவில்லை என்றார்.

# பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை**

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கப் பணம் வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.



பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக் கரும்பு வழங்கிட முதல்வர் ஏற்கனவே அறிவித்துள்ளார். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000 வழங்கிட முதல்வர் ஆணையிட்டுள்ளார். பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு மொத்தம் ரூ.6936,17,47,959 செலவில் வழங்கப்படும்.

பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின்**

# மாநில இணை செயலாளர் நியமனம்

**தஞ்சாவூர்**

தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் மாநில துணைச்செயலாளர் மற்றும் அலுவலக செய்தி தொடர்பாளர் ஐங்கரன் பாலமுரளி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில தலைவர் புலவர் ஆதி நெடுஞ்செழியன், மாநில துணைத் தலைவர் கோவிந்தராஜ், மாநில பொதுச்செயலாளர் A.T.ராஜா சுப்ரமணியன் ஆகியோர் ஆலோசனையின்படி, மாநில அவைத் தலைவர் கவிஞர் செம்பியுரான், மாநில இணைச்செயலாளர் ஆதிகுமார் ஆகியோரின் பரிந்துரைப்படியும், தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவை மாநில இணை செயலாளராக Rtn V.கோவிந்தராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



இவருக்கு தேசிய திருக்கோயில்கள் பாதுகாப்பு பேரவையின் அனைத்து நிர்வாகிகளும் முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# திருவையாறு தியாகராஜர் 179-வது ஆராதனை விழா

## ஐகோர்ட் நீதிபதி துவக்கி வைத்தார்





**● தஞ்சாவூர்**

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் தியாக பிரம்ம மகோற்சவ சபா சார்பில் சத்குரு ஸ்ரீ தியாகராஜர் 179வது ஆராதனை விழா நேற்று (3ம்தேதி) மாலை தொடங்கியது. சபா தலைவர் ஜி.கே.வாசன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் முன்னிலை வகித்தார். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார், குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார்.

அப்பொது அவர் பேசுகையில்: இந்த ஆராதனை விழா என்பது இந்திய எல்லை கோடுகளை எல்லாம் தாண்டி உலகம் முழுவதிலும் சிறந்த இசை விழாவாக உருவெடுத்திருக்கிறது.

நான் அறிந்தவரை இந்தியாவிலே எந்த ஒரு இசை நிகழ்விற்கும் 5 குடியரசு தலைவர்கள் பங்கு பெற்றதாக சரித்திரம் இருக்கிறதா என்று தெரியவில்லை.

2400 கீர்த்தனைகள் படைத்த ஒரே மகான் இருக்கிறார் என்று சொன்னால் அது தியாகராஜ சுவாமிகள் மாத்திரம் தான். எனவே தான் சங்கீத மும்மூர்த்திகள் என்பவர்கள் மூவராக இருந்தாலும் கூட அவர்களில் தல நாயகராக தியாகராஜ சுவாமி கருதப்படுகிறார்.

எனவே அவருக்கு ஆராதனை செய்வதன் மூலமாக நாம் இறைவனை தொழுகிறோம். என்று அவர் பேசினார். தொடர்ந்து சீர்காழி சிவசிதம்பரம், பாடகி மகதி உள்ளிட்டோரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.























# சினி டாக்

## ஐஸ்வர்யா தத்தா கடற்கரையில் செம ஹாட் போட்டோஷூட்

நடிகை ஐஸ்வர்யா தத்தா பிக் பாஸ் மூலமாக பிரபலம் ஆனவர். தமிழுக்கு என் ஒன்றை அழுத்தவும் படம் மூலமாக அறிமுகம் ஆன அவர் அதற்கு பிறகு பல சின்ன படங்களில் நடித்து இருக்கிறார்.

ஐஸ்வர்யா தத்தா அவ்வப்போது வெளியிட்டு வரும் கவர்ச்சி போட்டோக்களுக்கும் இன்ஸ்டாகிராமில் வைரல் ஆகின்றன.

தற்போது கடற்கரையில் மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கும் போட்டோக்களை அவர் வெளியிட்டு இருக்கிறார்.





## திருமணம் நின்றுவிட்டதாக கூறப்படும் நிலையில் நிவேதா பெத்துராஜ் போட்ட பதிவு

நடிகை நிவேதா பெத்துராஜ் ஒரு நாள் கூத்து படத்தின் மூலமாக பிரபலம் ஆனவர். அந்த படத்தில் நிவேதா வரும் அடியே அழகே பாடல் பெரிய அளவில் பிரபலம் ஆனது குறிப்பிடத்தக்கது.

அடுத்தடுத்து அவருக்கு தமிழ், தெலுங்கு என பட வாய்ப்புகள் அதிகம் வர பிசியாக நடித்தார். இருப்பினும் கடந்த சில வருடங்களாக அவர் படங்களில் நடிக்காமல் தான் இருக்கிறார்.

கடந்த வருடம் நிவேதா பெத்துராஜுக்கு துபாயை சேர்ந்த தொழிலதிபர் ரஜித் இப்ரான் என்பவர் உடன் நிச்சயதார்த்தம் நடந்தது. ஆனால் சமீபத்தில் அந்த போட்டோக்களை நிவேதா தனது இன்ஸ்டா பக்கத்தில் இருந்து நீக்கிவிட்டார். அதனால் நிவேதா திருமணம் நின்றுவிட்டதாக தகவல் பரவி வருகிறது.


இந்நிலையில் புத்தாண்டு அன்று நிவேதா ஒரு பதிவை போட்டிருக்கிறார். அதில் "2026 – be nice" என அவர் பதிவிட்டு இருக்கிறார்.

வெளிநாட்டில் எடுத்த சில புகைப்படங்களுடன் அவர் பதிவிட்டுள்ள 2026ஆவது நன்றாக இருக்க வேண்டும் என அவர் போட்டிருக்கும் பதிவு வைரலாகி இருக்கிறது.



## பிப்ரவரியில் வெளியாகும் நடிகை ஐஸ்வர்யா அர்ஜுனின் 'சீதா பயணம்'

'ஆக்சன் கிங் 'அர்ஜுனனின் மகளான நடிகை ஐஸ்வர்யா அர்ஜுன் கதையின் நாயகியாக அழுத்தமான வேடத்தில் நடித்திருக்கும் 'சீதா பயணம்' எனும் திரைப்படம் வரும் பிப்ரவரி மாதம் வெளியாகும் என படக் குழுவினர் உற்சாகத்துடன் தெரிவித் துள்ளனர். இயக்குநர் அர்ஜுன் இயக்கத்தில் உருவாகியுள்ள' சீதா பயணம்' எனும் திரைப் படத்தில் ஐஸ்வர்யா அர்ஜுன், நிரஞ்சன், அர்ஜுன், துருவா சர்ஜா, பிரகாஷ் ராஜ், சத்யராஜ், கோவை சரளா உள் ளிட்ட பலர் நடித்திருக்கிறார் கள். ஜி.பால முருகன் ஒளிப் பதிவு செய்திருக் கும் இந்த திரைப்படத்திற்கு அனூப் ரூபன்ஸ் இசை யமைத்திருக்கிறார். பயணத்தின் போது ஏற்படும் எதிர்பாராத சம்பவங்களை மையப் படுத்தி தயாராகி இருக்கும் இந்த திரைப் படத்தை ஸ்ரீ ராம் ஃபிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரித்திருக்கிறது.



இப்படத்தின் பாடல்களும், முன்னோட் டமும் வெளியாகி படத்தைப் பற்றிய எதிர் பார்ப்பை ஏற்படுத்தி இருந்த நிலையில் இந்தத் திரைப்படம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் தேதியன்று அதாவது காதலர் தினத் தன்று வெளியாகும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இதனிடையே நடிகை ஐஸ்வர்யா அர்ஜுனின் திருமணத்திற்கு பிறகு வெளியாகும் திரைப்படம் இது என்பதால்... இப்படத்திற்கான குறைந்தபட்ச எதிர்பார்ப்பு பார்வையாளர்களிடத்தில் ஏற்பட்டி ருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.